# பெண்கள் எவ்விதம் உடையுடுத்தக்கூடாது?







சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளிலிருந்து

அங்கே வெளியில் தெருவிலே உன் சரீரமானது வெளியிலே தெரியும்படியான இந்த ஒழுக்கமில்லாத ஆடையை, இந்த சிறிய பழைய பாவாடைகளையும், இந்த நாளிலே அவர்கள் உடுத்தும் காரியங்களையும் நீ அணிந்துக் கொள்வாயா?



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

## செய்தி: 65-12-06 தற்கால நிகழ்ச்சிகள் தீர்க்கதரிசனத்தின் மூலமாய் தெளிவாக்கப்படுகின்றன

314. சகோதரியே, நீளமான தலை முடியை கொண்டிருப்பது தேவனிடமாய் உனக்குள்ள நசரேய கவுரவமாயிருக்கையில், நீ குட்டையான தலைமுடியை வைத்துக்கொள்ள விரும்புகிறாயா?

"தன் தலைமயிரை வெட்டிக்கொள்வது அவளுக்கு அவமானமாயிருக்கும்".

அங்கே வெளியில் தெருவிலே உன் சரீரமானது வெளியிலே தெரியும்படியான இந்த ஒழுக்கமில்லாத ஆடையை, இந்த சிறிய பழைய பாவாடைகளையும், இந்த

நாளிலே அவர்கள் உடுத்தும் காரியங்களையும் நீ அணிந்துக் கொள்வாயா?

உன்னை நோக்கிப் பார்க்கும்படியான ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய இருதயத்திலே உன்னுடன் வேசித்தனம் செய்கிறான் என்று உனக்கு தெரியுமா?

நீயும் உன்னை அவ்விதமாக காண்பித்துக் கொள்கிறாய்.

அழகு சாதனங்களை உபயோகிக்கிற ஸ்திரீகளே, வேதாகமத்திலே, ஒரே ஒரு ஸ்திரீ மாத்திரம் அழகு சாதனங்கள் உபயோகித்தாள் என்றும், அவளை தேவனானவர் நாய்களுக்கு தீனியாக போட்டார் என்றும் உங்களுக்கு தெரியுமா?

ஒரு யேசபேல், அவளுடைய நாள் துவங்கி வெறுக்கப்பட்டதான ஒரு பெயர்,

ஏனென்றால் அதைப் பற்றியதான அவளுடைய கிரியைகளினிமித்தம் அவளை அந்த விதமாக சொல்லி அழைத்து அதை சபித்தது தீர்க்கதரிசியான எலியா என்று நீங்கள் அறிவீர்களா?

யோவான் ஸ்நானன் குற்றப்படுத்தியது ஏரோதியாளை என்று உங்களுக்கு தெரியுமா? உலகத்தை சார்ந்த அந்த "ஹாலிவுட்' காரியமாக இருப்பதை நீங்கள் விரும்புவதில்லை.

"நீங்கள் உலகத்தின் காரியங்களில் அன்புகூர்ந்தால், தேவனுடைய அன்பு உங்களில் இல்லை".



இந்த சிறு பெண்கள் இறுக்கமான ஆடைகளை அணிந்து தெருக்களில் இங்கும் அங்கும் உடலை நெளித்து நடந்து, தங்களை மரணத்துக்கு உறையச் செய்யும் அளவுக்கு அது குளிராக அமைந்துள்ளது.



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 65-02-21M விவாகமும் விவாகரத்தும்

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் கடவுள் யார்? சில ஆண்டுகளுக்கு முன்பு அந்த கூடாரத்தில் நவீன நாளின் தேவன் என்னும் பொருளின் பேரில் நான் பிரசங்கித்தது நினைவிருக்கிறதா? ஒரு பெண் அழகுபடுத்தும் பொருட்களை பூசிக்கொண்டு, உடையை முழங்காலுக்கு மேல் இழுத்துவிட்டு, அங்கு உட்கார்ந்து கொண்டிருந்தாள். நான் “இதோ, உங்கள் கடவுள்'' என்று கூறினேன். அது உண்மை! அவள் எல்லா விளம்பரங்களிலும் அரை நிர்வாணியாகக் காட்சியளிக்கிறாள். தெருக்களில் செல்லும் போதும் அவ்வாறே இருக்கிறாள். அவள் சாத்தானின் கருவி.

”ஆதி முதலாய்'' என்று இயேசு கூறினார். பாருங்கள் அது இப்பொழுது இவ்வாறுள்ளதை நாம் காண்கிறோம் - ஆதி முதலாய் என்று அவர் எதைக் குறித்து கூறினாரென்று.

அஞ்ஞானிகள் பெண்ணை தெய்வமாக வழிபடுகின்றனர், அது உங்களுக்குத் தெரியுமா பெண் தெய்வம்? நிச்சயமாக அவர்கள் அதை செய்தனர், தங்கள் வழிபாட்டில் அவர்கள் இனசேர்க்கை செயல்களைக் கொண்டிருந்த காரணத்தால், அவர்கள் அவளை தெய்வமாக்கினர். அவள் சிருஷ்டிகர் என்று அவர்கள் உரிமை கோரினர். அவள் தன் கர்ப்பத்தில் வித்தை சுமந்து சிருஷ்டித்தாள் என்று அவர்கள் கூறுகின்றனர். அது பொய், சிருஷ்டிகர் ஒருவர் மாத்திரமே. அவர் தான் தேவன். பவுலின் காலத்தில் நடந்தது உங்களுக்கு

நினைவிருக்கிறதா? எபேசுவிலிருந்த தியானாளின் சிலை. கற்பாறையில் செதுக்கப்பட்ட உருவம். அவள் வானத்திலிருந்து கீழே எறியப்பட்ட தெய்வம் என்று அவர்கள் கூறினர். அஞ்ஞான வழிபாடு எவ்வாறுள்ளதென்று உங்களால் காண முடிகின்றதா? நாம் அதை அறியாமலேயே, அஞ்ஞான வழிபாட்டிற்கு - பூமியிலேயே மிகவும் கீழ்த்தரமான சிருஷ்டியாகிய பெண்ணிடம் - மறுபடியும் திரும்பிவிட்டோம். பெண் வழிபாடு அவள் தன் விருப்பப்படி மனிதனை எந்த பக்கத்திலும் ஆட்டி வைப்பாள். அவளுடைய வெளிப்புற அழகின் உள்ளே நரகம் மறைந்துள்ளது என்பதை அறியாமலிருக்கின்றனர். அவள் வீடு பாதாளத்துக்குப் போகும் வழி என்று சாலொமோன் கூறியுள்ளான்.

60 வெளிப்படுத்தல் 2:15-ல், நிக்கொலாய் மதஸ்தருடைய போதகத்தைக் குறித்து இயேசு என்ன கூறினார் என்று நாம் தெளிவாகக் காண்கிறோம் - அந்த சபை தோன்றி, தன்னை வார்த்தைக்குப் புறம்பாக்கிக் கொண்டது.

மேலும் நாம் இழிவான, தேவனற்ற, அசுத்தமான தொலைகாட்சி நிகழ்ச்சிகளை, ஹாலிவுட் செக்ஸ் ராணிகள் நடத்துவதை தொலைக்காட்சி தெளிவாகக் காண்கிறோம். இந்த சிறு பெண்கள் இறுக்கமான ஆடைகளை அணிந்து தெருக்களில் இங்கும் அங்கும் உடலை நெளித்து நடந்து, தங்களை மரணத்துக்கு உறையச் செய்யும் அளவுக்கு அது குளிராக அமைந்துள்ளது. இதன் மூலம் நாம் நகரத்தின் அசுத்தத்தை காண முடிகிறது. பிசாசு அப்படி செய்யத் தூண்டுகிறான்

என்பதை அவர்கள் அறியாமலிருக்கின் றனர். அவர்கள் பிசாசினால் பீடிக்கப்பட்டு அதை அறியாமலிருக்கின்றனர். ஒரு பெண் நாய் அவ்வாறு செய்வதை நீங்கள் காண்பதில்லை, இல்லையா? எந்த பெண் இனமும் அவ்வாறு செய்வதை நீங்கள் காண்பதில்லை. எந்த ஆணும் அவளிடம் நடந்து செல்லாதிருப்பது நலம்.

61 பாருங்கள்? உங்களுக்கு காட்சி விளங்குகிறதா? கர்த்தருக்கு சித்தமானால், இன்னும் சிறிது நேரத்தில் வேறொன்றை நாம் அறிமுகம் செய்யப் போகின்றோம்.

நீங்கள் நிக்கொலாய் மதஸ்தினரையும் அவர்களுடைய போதகங்களையும் காண் கிறீர்கள்; நீங்கள், அவர்கள் இளம்பெண், டீன் - ஏஜ் ராணிகள் என்று அழைப் பவர்களை, ஆடைகளையும் பெண்களை தெருவில் காண் கிறீர்கள். ஆடைகள்

களைந்து போடும் நடனங்களை (Striptease) காண்பதற்கு முன்பெல்லாம் அதற்கென்று நடத்தும் மோசமான காட்சி களுக்கு செல்ல வேண்டியதாயிருந்தது. ஆனால் இப்பொழுதோ உங்கள் கண் களைத் திறந்து தெருவில் பார்த்தால் போதும். நீங்கள் இப்பொழுது செய்ய வேண்டியது அவ்வளவுதான். எல்லாமே ஆடை களைந்த பெண்களைக் கொண் டுள்ளது. நிச்சயமாக, அவர்கள் ஏன் அப்படி செய்கின்றனர்? உங்கள் ஆசை யைத் தூண்ட, உங்களுக்கு மோகம் உண்டாக்க. அந்த ஒன்றிற்காகத் தான் அவள் அப்படி செய்கிறாள். அவள் அசுத்தமாயிருப்பதால் அப்படி செய்கி றாள். அவள் அவ்வாறு உண்டாக்கப்பட் டிருப்பதால் அப்படி செய்கிறாள். சாத்தா னின் கரங்களில் அவள் ஒரு கருவியாக

இருக்கிறாள் என்பதை உணராமலிருக்கிறாள். அப்படித்தான் அவள் இருக்கிறாள்.

இன்று நமது பள்ளிக்கூடங்களிலும் கூட அவர்கள் இன சேர்க்கை செயல்களை கற்றுத் தருகின்றனர். பெண்ணை வழிபடும் நமது அழுகின உலகம்! அவர்களுக்கு அதை நம்ப விருப்பமில்லையென்று எனக்குத் தெரியும். அவர்கள் ஒரு நாள் நின்று கிறிஸ்தவ பாடல்களைப் பாடி விட்டு, இரவு முழுவதும் பெண்களுடன் சுற்றித் திரிகின்றனர். பாருங்கள்? சரி. வார்த்தையாகிய தேவனுடைய பார்வையில், தேவன் இவ்வுலகில் வைத்துள்ள மிருகங்கள் அனைத்திலும் அவள் கீழ்த் தரமாக இருக்கிறாள். கவனியுங்கள்.



அதன் காரணமாகத்தான் ஒரு அழகுள்ள ஸ்திரீ
சாத்தானின் கண்ணிக்கு இலக்காகிறாள்.
அத்தகைய ஒருவளை அவன் தன் கைக்குள்
போட்டுக் கொள்ளுவானானால், தேசத்திலுள்ள
மது நிலையங்கள் மனிதர்களை நரகத்திற்கு
ஆயத்தம் செய்வதை விட அதிகமான
மனிதர்களை ஒரு அழகான பெண்ணின் மூலம்
அவன் நரகத்திற்கு அனுப்பிவிடுவான். அது
உண்மை..



## சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 63-11-24E மூவகை விசுவாசிகள்

சாத்தான் என்பவன் தான் அழகு என்று காரியத்தில் வசிக்கின்றான். வேதமும் அப்படித்தான் கூறுகின்றது.

162. அதன் காரணமாகத்தான் ஒரு அழகுள்ள ஸ்திரீ சாத்தானின் கண்ணிக்கு இலக்காகிறாள்.

அத்தகைய ஒருவளை அவன் தன் கைக்குள் போட்டுக் கொள்ளுவானானால், தேசத்திலுள்ள மது நிலையங்கள் மனிதர் களை நரகத்திற்கு ஆயத்தம் செய்வதை விட அதிகமான மனிதர்களை ஒரு அழகான பெண்ணின் மூலம் அவன்

நரகத்திற்கு அனுப்பிவிடுவான். அது உண்மை ..

அதேவிதமாக வசிகரமான ஒரு வாலிபனும் பிசாசின் கையில் அமைவா னானால் அநேக பெண்களை பிசாசு நரகத்திற்கு அனுப்பிவிடுவான். ஆம் ஐயா.

163. சாத்தான் அழகில் வசிக்கிறான் என்பதை கவனியுங்கள். ஆதியிலே அவன் செய்ய முயற்சித்த காரியம் என்ன? - மிகாவேலின் இராஜ்ஜியத்தைக் காட்டிலும் ஒரு அழகான இராஜ்ஜியத்தை உண்டாக்க அவன் நினைத்து, வட திசையாக திரும்பி, மூன்றில் இரண்டு பங்கு தேவ தூதர்களை தனக்கென்று வசியப்படுத்திக் கொண்டான்.



# ஓ, என்னே! ஜனங்கள் அப்படிப்பட்டவைகளில் எவ்வாறு மயங்கி விட முடியும்? அவர்கள் தேவனுடைய வார்த்தையை அவமதிப்பதால் தான்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 63-06-23E அவருடைய வருகையின் அடையாளமாக பிரகாசிக்கும் சிகப்பு விளக்கு

131. சில நாட்களுக்கு முன்பு லாஸ் ஏஞ்சலிஸில் நான் கேம்ப் மைதானத்துக்குச் சென்றிருந்தேன், நான் காரில் கேம்ப் மைதானத்துக்கு சென்று கொண்டிருந்த போது, மிகவும் அழகான ஒரு பெண் செல்வதைக் கண்டேன்.

"அவள் ஒரு காட்சியில் (Show) பங்கு கொள்வதற்காக செல்லவேண்டும்'' என்று நினைத்தேன், அவளுடைய முன்பாகத்தில் ஆறு அல்லது எட்டு அங்குலம் அகல முள்ள ஒரு துணி மாத்திரம் தொங்கிக் கொண்டிருந்தது.

அதனுடன் மூன்று அல்லது நாலு அங்குலம் அகலமுள்ள உடையின் ஓரஜாலர் (fringe) சேர்க்கப்பட்டிருந்தது.

அவள் மேல் பாகத்தில் சிறு புள்ளிகள்.

அங்கிருந்த துணியை உங்கள் கைக்குள் அடக்கி விடலாம்.

அவள் மாடுமேய்ப்பவனின் (Cow boy) தொப்பி ஒன்றையும், காலணிகளையும் அணிந்திருந்தாள், மிகவும் கவர்ச்சி யுள்ளவள்...

எந்த ஒரு வாலிபனும் அவள் இடுப்பை ஆட்டி நடந்து செல்லும் விதத்தை கண்டு, காரை சடுதியாக பிரேக்' போட்டு நிறுத்தி, அவளைக் காணாமல் செல்லவே முடியாது.

132. நான் கேம்ப் மைதானத்தை அடைந்தேன். **நான் திரும்பிச் சென்று அவளை நிறுத்தி, "வாலிபப் பெண்ணே, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உன்னிடம் பேச விரும்புகிறேன். நீ அழகில் சிறந்தவள் என்பதில் சந்தேகமில்லை. உன் உடலமைப்பு மிகவும் கவர்ச்சியாயிருந்தாலும்... வாலிபர் காரை சடுதியாக 'பிரேக்' போட்டு நிறுத்தும் சத்தத்தை நீ கேட்க விரும்புகிறாய். ஆனால் உன்னை அவ்விதம் செய்யத் தூண்டும் ஆவி உன்னைப் பிசாசின் நரகத்திற்கு கொண்டு சென்று, அங்கு நீண்ட காலம் நீ வேதனைப்பட வேண்டும் என்பதை நீ உணருகிறாயா? உன் அழகான உடல் கட்டும், கன்னங்களும், சிகப்பு இதழ்களும் இன்னும் ஆறே மாத காலத்தில் பூமிக்கடியில் புழுக்களால் நிறைந்து, அதனுள் இருக்கும் உன் ஆத்துமா பிசாசினால் மிகுந்த வேதனைக்குள்ளாக்கும் என்று**

**உனக்குத் தெரியுமா?" என்று கூறலாமென்று நினைத்தேன்.**

133. ஆனால் ஏதோ ஒன்று என்னை தடுத்து நிறுத்தினது. "அப்படி செய்தால், உன்னை சிறையில் தள்ளி விடுவார்கள்" என்று தேவன் கூறுவது போலிருந்தது. பார்த்தீர்களா? அப்பொழுது பில்லி எனக்கு சைகை காட்டி, 'நம்பிடுவாய்' என்னும் பாடலை அவர்கள் பாடுவதைக் கேட்க என்னை அழைத்தான்.

134. ஓ, என்னே! ஜனங்கள் அப்படிப் பட்டவைகளில் எவ்வாறு மயங்கி விட முடியும்? அவர்கள் தேவனுடைய வார்த் தையை அவமதிப்பதால் தான்.



நான் அவளிடம், “இப்படிப்பட்ட உடை
உடுத்தி என் சபைக்குள் வர நான்
அனுமதிக்க மாட்டேன்” என்றேன்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

# செய்தி: 58-09-28E சர்ப்பத்தின் வித்து

244. நான் பிரசங்கியாயிருந்து, என் பிரசங்க பீடத்தில் ஒரு பெண் பிரசங்கியை நான் ஏற்றி, ஒரு பெண் பிரசங்கம் செய்யக்கூடாதென்று நான் வேதத்தில் படித்தால், அவர்கள் என் முதுகு தோலை உறித்தாலும் நான் கவலைப்படாமல் அவளை நீக்கி விடுவேன்.

245. இப்பொழுது சகோதரி. ரைட் உட்கார்ந்து கொண்டிருக்கும் இடத்தில் ஒரு இரவு உட்கார்ந்திருந்த ஒரு பெண், அப்படி ஏதோ ஒன்றை நான் செய்ததற்காக என்னை வெளியே எறிந்துவிட முயன்றாள். ஆம், ஐயா. நான் அவளிடம், “இப்படிப்பட்ட உடை உடுத்தி என் சபைக்குள் வர நான்

அனுமதிக்க மாட்டேன்” என்றேன். முன்பெல்லாம் அவர்கள் இதுவரை வெட்டின ஆபாசமான ஆடைகளை அணிவது வழக்கம். அவர்களுடைய பாதி உடல் வெளியே காணப்படும். நான், “அவர்கள் என் சபைக்கு வருவார்க ளானால் நிச்சயம் வெளியே துரத்தி விடுவேன் என்றேன். இங்கிருந்த அவ லட்சணமான ஆடை உடுத்த ஒரு பெண் (அதற்கு பிறகு அவள் இறந்து விட்டாள். இறக்கும் தருவாயில் அவள் என்னை வரவழைத்தாள். அவள் ஒரு கத்தோலிக்கப் பெண்.) இங்கு நடந்து வந்து இப்படி உட்கார்ந்தாள். நான் திரும்பிப் பார்த்து அவள் அங்கு உட்கார்ந்திருப்பதைக் கண்டேன். அவர்கள் பாடல்கள் பாடிக் கொண்டிருந்தார்கள். நான் என் கோட்டை கழற்றி, அவளிடம் நடந்து சென்று,

அவளுடைய தோள்களில் அதை போட்டு கொடுத்து, அம்மணி, நான் பிரசங்கிப்பதை நீ கேட்க விரும்பினால், தேவனுடைய சபையில் நீ உள்ள போது, தயவு செய்து இந்த "கோட்டை அணிந்து கொள்" என்றேன்.

246. அவள் வேகமாக எழுந்து முணுமுணுத்துக் கொண்டே கட்டிடத்தை விட்டு வெளியே சென்று, "என் பசுவும் கூட அப்படிப்பட்ட மார்க்கத்தை பின்பற்ற நான் அனுமதிக்க மாட்டேன்" என்றாள்.

நான், "கவலைப்படாதே, அது பின்பற்றாது" என்றேன்.

247. நாங்கள் கூடாரக் கூட்டம் நடத்திக் கொண்டிருந்த போது, அவள் மரணத் தருவாயிலிருப்பதாக கூறி என்னை

வரும்படி அழைத்தனர். அவளுக்கு மார டைப்பு ஏற்பட்டு மரணத்தருவாயிலிருந் தாள். என்னை அழைத்துச் செல்ல அவள் கணவர் வந்திருந்தார். அவர் “வேகமாக வாருங்கள்” என்றார். (நான் அப்பொழுது கூட்டத்தில் இருந்தேன்). அவர் உயர மானவர். அவர் கதவருகில் நின்று எனக் காக காத்திருந்தார். நான் ஓடினேன்.

248. நான் என் காரில் ஏறி அங்கு சென்றேன். அங்கு சென்ற போது, ஹாவர்ட் பார்க்கில் வசிக்கும் அந்த வயோதிப நர்ஸை கண்டேன். அவள், “சங்கை போதகரே, நீங்கள் வந்திருக்க வேண்டிய அவசியமில்லை” (அது சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன்பு, அதைக் காட்டிலும் அதிகமாக கூட இருக்கலாம்), “அவள் இறந்து விட்டாள். அவள் இறந்து மூன்று நிமிடங்களாயின. அவள் உங்க

ளுக்காக உரக்கச் சத்தமிட்டாள். உங்க ளுக்கு என்னிடம் ஒரு செய்தி உண்டு" என்றாள்.

249. நான், "என்ன?" என்றேன். அவள், "அந்த போதகரிடம், 'தயவு செய்து மன்னித்துக் கொள்ளுங்கள்' என்று கூறின தாக சொல்லவும்," என்றாள் என்று கூறி னாள்.

250. அவளைக் காண நான் சென்றேன், அழகானவள். அவள் அதிகமாக வேதனைப்பட்டதால் மூக்கில் சுருக்கங்கள் விழுந்திருந்தன. அழகான பெண். அந்த சுருக்கங்கள் கவனத்தை கவரும் வகையில் இருந்தன. கண்கள் குழியிலிருந்து முழு வதும் வெளியே வந்திருந்தன. அவை பின்னால் செருகியிருந்தன, அவள் மலம் கழித்திருந்தாள். மூத்திரமும் போயிருந்

தாள். அவளுடைய படுக்கையிலிருந்து புகை வந்து கொண்டிருந்தது.

251. அவள் கணவர், "சகோ. பிரன்ஹாமே, ஜெபம் செய்யுங்கள். அவள் உங்களைக் காண வேண்டுமென்று விரும்பினாள்" என்றார்.

நான் அவளுக்கு இப்பொழுது எந்த ஜெபமும் உபயோகமிராது" என்றேன்.

252. மரம் எந்தப்பக்கம் சாய்கிறதோ அந்தப் பக்கம் விழுந்து போகும். "மோசம் போகாதிருங்கள், தேவன் தம்மைப் பரியாசம் பண்ணவொட்டார்; மனுஷன் எதை விதைக்கிறானோ அதை அறுப்பான்." (கலா.6:7).



# பெண்கள் அணியும் பைஜாமாக்கள் ஆண்களின் உடையாகுமா?

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து



# செய்தி: 64-08-30M கேள்விகளும் பதில்களும் COD #21

Q.367. **உங்களை ஒரு கேள்விகேட்க விரும்புகிறேன். முதலாம் கேள்வி: பெண்கள் அணியும் பைஜாமாக்கள்...** (இப்பொழுது ஒரு நிமிடம் பொறுங்கள், இதை நான் படிக்கட்டும் [சகோ.பிரன்ஹாம் கேள் வியை தனக்குள் படிக்கிறார் - ஆசி] இல்லை, இது சரியாயிருக்கும்). **பெண்கள் அணியும் பைஜாமாக்கள் ஆண்களின் உடை யாகுமா?**

270. இவர்கள் என்னை கடினமான கேள்வி கேட்க முடியாதென்று என்னிடம் கூறாதீர்கள். எனக்குத் தெரியாது. அதைக் குறித்து நீங்களே தீர்மானித்து கொள் ளும்படி உங்களை விட்டு விடப் போகி

றேன். அதை அணிந்து கொண்டு நீங்கள் ஜனங்களுக்கு முன்பாக இங்கும் அங்கும் நடக்கக் கூடாது; அது எனக்குத் தெரியும். அந்த விதத்தில் அது சரியல்ல. ஆனால் அதை அணிந்து கொண்டு படுக்கைக்குச் செல்லும் விஷயத்தில், எனக்குத் தெரி யாது. அதை நான் வேத வசனங்களைக் கொண்டு ஆதாரப்படுத்த வேண்டும்.

எனக்குத் தெரியாமலிருந்தால், நான் உண்மையுள்ளவனாயிருப்பேன் என்று உங்களிடம் கூறினேன். என் சொந்த கருத்தை அதில் நான் நுழைக்க மாட்டேன் (சரி), நீங்கள் என் சொந்த கருத்தை அறிய விரும்பினாலொழிய, அது உங்களுக்கு வேண்டுமானால், நான் உங்களிடம் கூறுவேன். பாருங்கள்?

இப்பொழுது ஞாபகம் கொள்ளுங்கள், இது கோடிக்கணக்கான மைல்கள் தவறா யிருக்கக் கூடும். இரவில் நீண்ட ஆடை (Night gown) அணிந்து கொள்வது நல மென்று கருதுகிறேன். ஆனால் உங்க ளால்... அது உங்களைப் பொறுத்த விஷயம். அதை என்னால் உங்களிடம் கூற இயலாது, ஏனெனில் அதை வேத வசனங் களைக் கொண்டு என்னால் ஆதாரப்படுத்த முடியாது. இப்பொழுது, இது நான் உரைப் பது, அவரல்ல, ஞாபகம் கொள்ளுங்கள். பாருங்கள்?

அந்த மனிதன் விபச்சாரம் செய்த
குற்றத்துக்காக பதில் கூறும் போது, அதற்கு
காரணமாயிருந்தது யார்? நீ அப்படிப்பட்ட
ஆபாசமான உடை உடுத்து உன்னைக்
காண்பித்த விதமே



# சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: 58-09-28E சர்ப்பத்தின் வித்து

222. சில ஆண்டுகளுக்கு முன்பு, முதலாம் பாடல் வெளிவந்ததை யோசித்துப் பாருங்கள். உங்களில் வயது சென்றவர்கள்... முன்பெல்லாம் வானொலியில் பாடுவதற்கு முன்பு, அவர்கள் பாடல்களை தணிக்கை செய்வது வழக்கம். முதலாவதாக வெளிவந்த ஆபாசமான பாடல், "சுருட்டி விடுங்கள், பெண்களே, சுருட்டி விடுங்கள் உங்கள் அழகான முழங்கால்களைக் காண்பியுங்கள். உங்கள் அப்பாவையும் அம்மாவையும் பார்த்து சிரித்து, அவர்களுக்கு பழைய ஹா - ஹா - ஹா- ஒன்றைக் கொடுங்கள்" என்பதே. இந்த பாடலை தான் அவர்கள் முதலில்

நழுவவிட்டார்கள். அந்த பாடலை எழுதின ஆள் இன்று எங்கிருக்கிறான் என்று நினைக்கிறீர்கள்? அவன் மரித்துவிட்டான்.

223. முதன் முறையாக, “ஆபத்தான வளைவுகள் (dangerous), “உடைகளை களைந்து மனதை தொந்தரவு செய்தல்” (striptease) என்னும் சொற்களை கண்டு பிடித்து ஆயிரக்கணக்கான ஆத்துமாக் களை நரகத்துக்கு அனுப்பின கிளாரா பெள்-வைக் குறித்து என்ன நினைக்கி றீர்கள்? அவள் இன்றிரவு எங்கிருக்கிறாள் என்று நினைக்கிறீர்கள்? அவள் மரித்து நீண்ட காலமாகி விட்டது. அவளுடைய உடல் கல்லறையில் படுத்து, புழுதியில் அரிக்கப்படும் இந்நேரத்தில் அவள் எங்கிருக்கிறாள்? புழுக்கள் அவள் உடலைத்தின்று கொண்டிருக்கின்றன. அவளுடைய ஆத்துமாவோ நீதியுள்ள

தேவனுக்கு முன்பாக நியாயத்தீர்ப்புக்காக காத்திருக்கிறது.

224. பெண்களை ஆபாசமான உடைகள் அணியச் செய்து, அவர்கள் முன்பாகமும் பின்பாகமும் வெளியே தள்ளிவரும் வகையில் இறுக்கமான உடைகளை தைத்து கொடுத்த அந்த மனிதன் இப்பொழுது எங்கிருக்கிறான்? “அவர்கள் ஏன் அப்படி செய்கிறார்கள்? அவர்கள் ஏன் அப்படிப் பட்ட உடைகளை உடுத்துகின்றனர்?” என்று நீங்கள் கேட்கலாம். மனிதர் உங்களைப் பார்க்க வேண்டும் என்பதற்காக அப்படி செய்கிறீர்கள். வேறெதற்காக செய்கிறீர்கள் என்று நீங்கள் நிரூபிக்க முடியாது. (சகோ. பிரன்ஹாம் பிரசங்க பீடத்தை அநேக முறை தட்டுகிறார் - ஆசி.)

225. நீங்கள் அப்படி செய்து, பாவி ஒருவன் உங்களைப் பார்க்கும் போது,

என்ன நடக்கிறது. தெரியுமா? நியாயத் தீர்ப்பு ஸ்தலத்தில்... “சகோ. பிரன்ஹாமே, என் கணவருக்கு என்னால் இயன்றவரை உண்மையுள்ளவளாக வாழ்ந்து வருகி றேன்” எனலாம். ஆனால் நீ விபச்சாரம் செய்ததாக குற்றஞ்சாட்டப்படுவாய். “ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபச்சாரஞ் செய்தாயிற்று என்று இயேசு கூறினார் (மத். 5:28). அந்த மனிதன் விபச்சாரம் செய்த குற்றத்துக்காக பதில் கூறும் போது, அதற்கு காரணமாயிருந்தது யார்? நீ அப்படிப்பட்ட ஆபாசமான உடை உடுத்து உன்னைக் காண்பித்த விதமே.

226. நீ பண்டைய காலத்து உடை களைத்தான் உடுத்த வேண்டுமென்று நான் கூற வரவில்லை, ஆனால் நீ நற்பணபுள்ள பெண்ணைப் போல் காணப்படுதல் நலம்.



# நல்ல ஸ்திரீகளை, நல்ல ஸ்திரீகளை இழிவான ஆடைகளை அணிந்து அங்கே வெளியே செல்லும்படி செய்கிறது எது?



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 59-03-01M வாசல் இடுக்கமாய் உள்ளது

149. நல்ல ஸ்திரீகளை, நல்ல ஸ்திரீ களை இழிவான ஆடைகளை அணிந்து அங்கே வெளியே செல்லும்படி செய்கிறது எது?

இப்பொழுதும் கூட கடுங்குளிராய் இருக்கும்போது, பதினாறு வயதுடைய சிறுபெண் பிள்ளைகளை தங்களுடைய தாயாருக்கு முன்பாக அணியக்கூடாத ஆடைகளுடன் வெளியே வீதியில் செல்லும்படி செய்கிறது எது?

அதற்குக் காரணம் அந்தப் பிள்ளை யல்ல. (அந்தப் பிள்ளை மேலான எதை யுமே அறிந்திருக்கவில்லை) ஆனால் பிரசங்கபீடத்தில் உள்ள ஒரு பிரசங்கியார்

தன்னுடைய கடமையின் பாதையை காத்துக்கொள்ள தவறியிருக்கின்றதே காரணமாகும். அது முற்றிலும் உண்மை. நிச்சயமாக.

ஸ்திரீகள் வீதியிலே பாலுணர்ச்சியை தூண்டும் கவர்ச்சியான ஆடைகளை அணிந்து மற்றும் அதைப் போன்ற காரியங்களோடு வீதியில் செல்லும்போது பாவிகள் அவர்களையே நோக்கிப் பார்க் கிறார்கள்.

ஆனால் உண்மையிலேயே அவள் அந்த மனிதனோடு தவறான வாழ்க்கை நடத்தியது போன்ற குற்றமுள்ளவளா யிருக்கிறாள் என்பதை அறியாதிருக் கிறாள்.

இயேசு அவ்வண்ணமாய் கூறினாரே! இயேசு, “ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில்

அவளோடே விபச்சாரம் செய்தாயிற்று, எனவே நியாயத்தீர்ப்பின் நாளிலே அதற்காக பதில் கூறவேண்டியவனாய் இருக்கிறான்” என்றார்.

வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறதே!



அந்தக் காரியத்தை நான் அன்று மிகவும் எதிர்த்து பிரசங்கம் செய்தேன். அதன் பின்பு அங்கு நான் திரும்பவும் அழைக்கப்படவில்லை. அதை நான் எதிர்பார்க்கவும் இல்லை. ஆனால் எது நல்லது எது தவறு என்று அவர்களுக்கு தெரியும். நியாயத்தீர்ப்பு நாளில் நான் நிற்கும் போது அவர்களின் இரத்தப்பழி என் கைகளில் இல்லை. அங்கு நிற்கும்போது நான் தேவவார்த்தையோடு நின்று உன்னை சந்திப்பேன்.



**சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து**

# செய்தி: 62-05-13M ஒரு உண்மையான தீர்க்கதரிசியின் பாதை

79 இன்றுள்ள சபைகள் சங்கடமான நிலைமையில் காணப்படுகின்றன. அங்கத்தினர்கள் தேவ தூதர்களைப்போல் பாடி பிசாசுகளைப்போல் நடனமாடுகின்றனர். பெந்தேகோஸ்தேயினர் என்று கூறிக் கொள்பவர்களும் கூட உலகப்பிரகாரமான எல்லாவித பொழுதுபோக்குகளிலும் கலந்துக் கொள்கின்றனர், படக்காட்சிக் கொட்டகைகள் அவர்களால் நிறைந்துள்ளன. இவ்விதமாக இருந்தாலும் அவர்கள் தங்களை கிறிஸ்தவர்களென்று அழைத்துக் கொண்டு, அந்நிய பாஷை பேசி, கால் கழுவதிலும், அப்பம் பிட்குதலிலும் கலந்துக் கொள்கின்றனர். ''நாயானது தான் கக்கினதைக் தின்னும்படி திரும்புவது

போல, மூடனும் தன் மூடத்தனத்திற்குத் திரும்புவான்'' (நீதி. 26:11) என்று வேதம் கூறுகின்றது. அவைகளெல்லாம் உலகமா யிருந்து உன்னை விட்டு கழுவப்பட வேண்டியதாயிருக்க பின் ஏன் அதற்குள் நீ திரும்பவும் செல்கின்றாய்? குறைவான ஆடைகளை உடுத்திக் கொண்டும், மயி ரைக் கத்தரித்துக் கொண்டும் தெருக்களில் ஆபாசமாய் வரும் மக்கள் தங்களை கிறிஸ்தவர்கள் என்று கூறிக் கொள்கி றார்கள். எவ்வளவு நிர்ப்பந்தம்?

80 நீதிக்கு புறம்பான ஆடைகளை உடுத்திக் கொள்ளுதல் பெண்களுக்கு தகாது என்று பரிசுத்த ஆவியானவர் கடிந்துக்கொள்ளும் நிலையில், ஒரு பெண் அவைகளையே செய்து, பரிசுத்த ஆவி யினால் நடத்தப்படுகின்றாள் என்று கூறி னால் அதை உன்னால் கற்பனை செய்து பார்க்க முடியுமா? அப்படியானால்

பரிசுத்த ஆவியானவர் எப்படிப்பட்டவரா யிருக்கக் கூடும்? பட்டப் பெயர்களாகிய பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினால் யாராவது ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டதை வேதத்திலிருந்து ஆதாரம் காட்டக் கூடுமோ? என்று ஒரு பிரசங்கியைக் கேட்டால், அவர் உன் முகத்திற்கு நேராக சிரித்து, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் நீ ஞானஸ்நானம் கொடுப்பதை கேலி செய்து உன்னை மதவெறியன் என்று கூறினால், இது பரிசுத்த ஆவியின் நடத்துதல் என்று நீ கற்பனை செய்கின்றாயா? பரிசுத்த ஆவி யானவர் தம் சொந்த வார்த்தையை மறுதலிக்க முடியுமா? இவ்விதக் காரியங் களை செய்யாமலிருந்து: நீ பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள். பரிசுத்த ஆவியினால் நடத்தப்படும் ஒரு மனுஷ னாவது, மனுஷியாவது எப்படி இக்காரி

யங்களை செய்ய முடியும்? ஒருக்காலும் முடியாது! அவர் பரிசுத்தர், அவருடைய ஜீவன் உனக்குள் இருந்தால் நீயும் அவரைப் போலவே இருக் கின்றாய்.

81 ''இதை கூறுவதற்கு உனக்கு அதிகாரம் இல்லை'' என்று ஒரு வேளை நீ கூறலாம். எனக்கு உரிமையுண்டு என்று நான் கூறுகிறேன். ஏனென்றால் அது தேவனுடைய வார்த்தையாயிருக் கின்றது. நாம் அதை பிரசங்கித்துத்தான் ஆக வேண்டும். அநேக கோழையான பிரசங்கிகள் சத்தியத்தை விட்டுவிடு கின்றார்கள். ஏனெனில் அவர்களுக்கு அதை பிரசங்கிக்க மன தைரியம் இல்லை. ஒரு வேளை முதலாவது அவர்கள் பிரசங்கிக்கவே அழைக்கப்படாதவர்களாக இருக்கலாம். ஆனால் ஒரு உண்மையான ஊழியக்காரன் தேவ வார்த்தையில் மட்டும் நிலைத்திருப்பான்.

82 நான் ஃபீனிக்ஸ் (Phoenix) என்னு மிடத்தில் பிரசங்கிக்க அழைக்கப்பட் டிருந்தேன். அங்கு ஒரு ஊழியக்காரரின் மனைவி மேலும் கீழுமாக குதித்து பாடல்களை நடத்திக் கொண்டிருந்தாள். அவளோ தன் உள்ளாடை தெரியுமள விற்கு குறைவான ஆடையுடுத்தியிருந் தாள். மேலும், தன் மயிரை கத்தரித்தும், காதுகளில் லோலாக்குகளை மாட்டியும் இன்னும் பலவிதமான அலங்காரங்களை செய்தவளாகவும் அவள் காணப்பட்டாள். இவ்விதக் காரியங்களை கொண்டிருந்தா லும் தாங்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றவர்கள் என்று அவர்கள் கூறிக் கொள்கிறார்கள். ஆனால் தேவனோ அவைகளை கடிந்துக் கொள்கிறார். அந்தக் காரியத்தை நான் அன்று மிகவும் எதிர்த்து பிரசங்கம் செய்தேன். அதன் பின்பு அங்கு நான் திரும்பவும் அழைக்கப்படவில்லை.

அதை நான் எதிர்பார்க்கவும் இல்லை. ஆனால் எது நல்லது எது தவறு என்று அவர்களுக்கு தெரியும். நியாயத்தீர்ப்பு நாளில் நான் நிற்கும் போது அவர்களின் இரத்தப்பழி என் கைகளில் இல்லை. அங்கு நிற்கும்போது நான் தேவவார்த்தையோடு நின்று உன்னை சந்திப்பேன்.





**Bro. Branham:**

நீங்கள் உங்கள் மனைவி அல்லாத வேறொரு ஸ்திரீயையும் அவளுடைய நடத்தையையும் கண்டு இச்சிக்கும் போது, நீங்கள் பிசாசினால் அபிஷேகம் பண்ணப் பட்டிருக்கிறீர்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள். பிசாசு இறங்கி வந்து சர்ப்பத்துக்குள் நுழைந்து கொண்டான்.

செய்தி: **58-09-28E** சர்ப்பத்தின் வித்து

# பெண்கள் எவ்விதம் உடையுடுத்தக்கூடாது?



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளிலிருந்து